செ. கு. எண்: 92 நாள்: 09.04.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 9.4.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம் - கண்ணுடையான்பட்டி கிராமம், மஜரா முத்தப்புடையான்பட்டி நான்கு வழிச்சாலையில் 29.3.2013 அன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து பழனி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, சாலையில் நின்று கொண்டிருந்த முத்தப்புடையான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமலை என்பவரின் மகன் சுப்பிரமணி மீது மோதியதில், அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நற்பவளக்குடி கிராமம் அருகே சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது 31.3.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. பிரான்சிஸ் என்பவரின் மகன் விவேக் மற்றும் திரு. ஆன்ட்ரன் என்பவரின் மகன் வினோத் என்கிற கெல்டன் போஸ் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஒழுப்பாக்கம் கிராமம், சென்னை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 3.4.2013 அன்று நின்று கொண்டிருந்த லாரி மீது நாகர்கோயிலிலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில், பேருந்து ஓட்டுநர் கன்னியாகுமரி மாவட்டம், திப்பரமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜ் என்பவர் சம்பவ இடத்திலேயேயும்; பேருந்தில் பயணம் செய்த கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம், வெட்டுக்காட்டுவினை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியபால் என்பவரின்

மனைவி சுவேதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த சுப்பிரமணி, விவேக், வினோத் என்கிற கெல்டன் போஸ், பேருந்து ஓட்டுநர் ராஜ் மற்றும் சுவேதா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஒழுப்பாக்கம் கிராமம், சென்னை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 3.4.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பதிமூன்று நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சுப்பிரமணி, விவேக் மற்றும் வினோத் என்கிற கெல்டன் போஸ், ஓட்டுநர் ராஜ், சுவேதா ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஒழுப்பாக்கம் கிராமம், சென்னை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 3.4.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**